வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க. எண். 481/மாஒ3/ஒபக/2022 நாள் :02.05.2022

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் – உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் மாவட்ட அளவில் Online Quiz நடத்துதல் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் தகவல் தெரிவித்தல் சார்பு.

பார்வை : சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.1898/A11/MS/SS/2022, நாள்.02.05.2022.

*********

பார்வையில் கண்ட சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி மாவட்ட அளவிலான Quiz 11–ம் வகுப்பு மாணவர்கள் 1200 பேருக்கு தேர்வு செய்யப்பட்ட 5 உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் 04.05.2022 முதல் 06.05.2022 வரை Science Group and Arts Group–க்கு இணைப்பில் உள்ளவாறு நடைபெறவுள்ளது.

இணைப்பில் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் அட்டவணையில் உள்ளபடி மாணவர்களுக்கு தகவல் தெரிவித்து உரிய தேதி மற்றும் நேரத்தில் Quiz –ல் கலந்துக்கொள்ளச் செய்ய தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மாணவர்கள் எவ்வித விடுப்பும் இன்றி சிறப்பாக Quiz–ல் கலந்துக்கொள்ள ஏதுவாக தலைமையாசிரியர்கள் மற்றும் வகுப்பாசிரியர்கள் வழிகாட்டுதல் வேண்டும். மேலும் பொறுப்பாசிரியரை நியமித்து மாணவர்களை Quiz –நடைபெறும் மையத்திற்கு அழைத்து சென்று மீள பள்ளிக்கு பாதுகாப்பாக அழைத்து வரவேண்டும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தை சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் Hi-tech lab முழுமையாக செயல்பாட்டில் உள்ளதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். முழுநேர மின் விநியோகம் மற்றும் Internet Connectivity தங்குதடையின்றி இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மாவட்ட அளவிலான 11–ம் வகுப்பு Quiz நடைபெறும் உயர் தொழில்நுட்ப ஆய்வகம் அமைந்துள்ள பள்ளிகளுக்கு மட்டும் இவ்வாரத்திற்கான Quiz நிறுத்திவைக்கப்படும்.

உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் நடைபெறும் ஒன்றியத்தை சேர்ந்த மேற்பார்வையாளர் மற்றும் ஒன்றிய Hi-tech lab ஆசிரியர் பயிற்றுநர் ஒருங்கிணைப்பாளர்கள் 3 நாட்களும் பள்ளியில் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இணைப்பில் கண்ட மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகள் / நெறிமுறைகளை தவறாது பின்பற்ற அனைத்து தலைமையாசிரியர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (பொ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

02/05/22

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

02/05/2022

இணைப்பு –
1.தெரிவு செய்யப்பட்ட உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தின் விவரம்.
2. Quiz –ல் கலந்துக் கொள்ள வேண்டிய மாணவர்கள் பெயர்பட்டியல்.

பெறுநர் –
1. அனைத்து உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

நகல் – முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம், அவர்களுக்கு அனுப்பலாகிறது.
நகல் – மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.

F:\00 ESTABLISHMENT\SSA Proceeding 121218 doc